



புதுச்சேரி மாநிலம், தட்டாஞ்சாவடி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் கு.சேது (எ) சேதுசெல்வத்திற்கு உதயசூரியன் சின்னத்திற்கு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க விற்கு ஒதுக்கப்பட்டுள்ள பூத் எண் 13 பாக்கமுடையான்பேட்டை பகுதியில் கழக துணைப் பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி தலைமையில் விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.அனிபால் கென்னடி ஆகியோர் வீதி, வீதியாக வாக்குகளை சேகரித்தார்கள். உடன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் அப்துல் சலாம், ஒன்றிய செயலாளர்கள் வேம்பி.ரவி, ஜெய. ரவிதுரை, ஜெ.ஜெயபால், வே.கில்பர்ட்ராஜ், க.மும்மூர்த்தி, கல்பட்டு வி.இராஜாஆர்.முருகன், ஆர்.பி.முருகன், நகர செயலாளர் நைனா முகம்மது, மாவட்ட கவுன்சிலர்கள் மீனா வெங்கடேசன், சிவக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தார்கள்.





தமிழ்நாடு முன்னாள் பொதுப்பணிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன், மதுராந்தகம் தொகுதி சட்டமன்ற இடைத் தேர்தலில் போட்டியிடும்,மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமனை ஆதரித்து, நேற்று செப்டம்பர் 30 மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி, அச்சரப்பாக்கம் ஒன்றிய கழகத்திற்கு உட்பட்ட தொழப்பேடு ஊராட்சி 193,194 பாகங்களுக்கு உட்பட்ட பொதுமக்களை நேரில் சந்தித்து திராவிட மாடல் அரசின் திட்டங்களை எடுத்துரைத்து உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை சேகரித்தனர், அப்போது கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் பலர் உடன் கலந்து கொண்டனர்.

சென்னை கிழக்கு மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு துணை அமைப்பாளர்

வழக்கறிஞர் குமரவேல் மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, அக்.1- சென்னை கிழக்கு மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு துணை அமைப்பாளர் வழக்கறிஞர் குமரவேல் (வயது 54) மதுராந்தகம் இடை தேர்தலில் பணியாற்றி கொண்டு இருந்தபோது பக்கத்தில் உள்ள உறவினர் வீட்டிற்கு சென்றவர் மாரடைப்பு ஏற்பட்டு இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாருக்கு கே. கலைவாணி என்ற மனைவி. கே.தீபிகா. B.Tech. கே.திவ்யா தர்ஷணி +2 ஆகிய இரண்டு மகள்கள் உள்ளனர். அன்னாரின் உடலுக்கு கழகத்தினர் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

மறைவு செய்தியறிந்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவித்துள்ளார்.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி திமுக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து பண்ருட்டி நகரத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள பெருவெளி பையம்பாடி பாகம் எண் 257 இல் பண்ருட்டி நகர மன்ற தலைவர் நகர கழக செயலாளர் க.இராஜேந்திரன் தலைமையில், கடலூர் மேற்கு மாவட்ட கழகவைத் தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் முன்னிலையில், கழக நிர்வாகிகளுடன் வீடு வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர்கள் தணிகை செல்வம் ஆனந்தி சரவணன் மாவட்ட மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் கதிர்காமன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் குணசேகரன், நகர அவைத் தலைவர் ராஜா நகர பொருளாளர் ராமலிங்கம், நகர துணை செயலாளர் கௌரி அன்பழகன், மாவட்ட பிரதிநிதி பிரபு சரவணன் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர்கள் ஏழுமலை, செந்தில்குமார், நகர இளைஞரணி அமைப்பாளர் சம்பத், நகர மாணவரணி அமைப்பாளர் பார்த்திபன், நகர தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் மோகன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு வாக்குகள் சேகரித்தனர்.

அரியலூரில் தொடர் திருட்டு

அரியலூர், அக்.1 - அரியலூர் மாவட்டம் அரியலூர் அருகே தவுத்தாய்குளம் பகுதி யில் டைல்ஸ் மற்றும் இரும்பு கடைகளில் வெள்ளி குத்து விளக்கு ரொக்கப் பணம் மற்றும் கைபேசிகளை திருடிச் சென்ற மர்ம நபர்களை காவல்துறை யினர் தேடி வருகின்றனர்.

அரியலூர் புது மார்க்கெட் தெருவைச் சேர்ந்தவர் ராஜ வேலன்(50) தவுத்தாய் குளத்தில் வேலு என்ற பெயரில் டைல்ஸ் கடை வைத்துள்ள இவர், வழக்கம் போல் நேற்று காலை கடையை திறக்க வந்த போது கடையின் மேற்கூரை பிரித்து கிடைப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

பின்னர் அவர் உள்ளேச் சென்று பார்த்த போது கல்லா பெட்டியை உடைத்து அதில் வைத்திருந்த ரூ.30,000 ரொக்கம் மற்றும் வெள்ளி குத்து விளக்கு உள்ளிட்ட பொருள்களை மர்ம நபர்கள் திருடிச் சென்றிப்பது தெரிய வந்தது.

இதுகுறித்து காவல் துறையில் புகார் செய்ததின் பேரில் சம்பவ இடத்துக்குச் சென்ற அரியலூர் நகர காவல் துறையினர், அங்குள்ள சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்து பார்த்த போது ஒருவர் மேற் கூரையை பிரித்து உள்ளே இறங்கியது பதிவாகி யுள்ளது.

இதன் தொடர்ச்சியாக டைல்ஸ் கடையின் எதிரே உள்ள இரும்பு கடையின் கண்ணாடியை உடைத்து 2 கைப்பேசிகள், ரூ.2,000 ஆகியவற்றை மர்ம நபர் திருடிச் சென்றிருப்பதும் தெரிய வந்தது.

இந்த இரு சம்பவங்கள் குறித்து காவல்துறையினர் வழக்குப் பதிந்து விசாரி க்கின்றனர் இதனால் அப்பகுதி மக்கள் மிகுந்த அச்சத்தில் உள்ளனர். காவல்துறையும், த.வெ.க. அரசும் நடவடிக்கைகள் எடுத்து பொதுமக்களின் அச்சத்தை போக்குமா என எதிர்பார்க்கின்றனர்.

நெறியில்லாமல் தறிகெட்டு ஓடும் விஜய் அரசுக்கு உதயசூரியனின் வெற்றி மூக்கணாங்கயிறாக அமையட்டும்!

விமான நிலையமா? ஒன்றிய அரசிடம் வலியச் சென்று தனியார் மயமாக்க வேண்டும் என வேண்டி விஜய் கடிதம். போக்குவரத்துத் துறையா? வடமாநிலத்தவரை அழைத்து தனியார் மூலம் வேலை வாய்ப்பு, பசி அறிந்து இப்படி ஒன்றிய அரசின் குறிப்பு உணர்ந்து, வலியச் சென்று அடுத்தடுத்து தமிழகத்திற்கு துரோகம் செய்து கொண்டிருக்கிறார் ஓடுகாலி த.வெ.க. கட்சியின் தலை வர் விஜய்.

இன்று அதே வழியில் மின்கணக்கீட்டுப் பணியை யும் தனியார்களிடம் ஒப்படைக்கத் திட்டம் எனக் கேள் விப்படுகிறோம். போகிற போக்கில் தமிழ்நாட்டையே யாரிடமாவது விற்றுவிடுவார்களோ என்கிற அச்சம் எழு கிறது.

தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்த தொழிலாளர் களை நியமித்துக் கொள்ளலாம். மண்டல அளவில் நிய மித்துக் கொள்ளலாம் என மின்வாரியத்தின் வருவாய் பிரிவு செப்டம்பர் 24ஆம் தேதி மண்டல பொறியாளர்க ளுக்குக் கடிதம் அனுப்பியதாகத் தெரிகிறது.

மின்சார வாரியத்தில் உள்ள 7,590 கணக்கீட்டாளர் கள் பணியிடங்களில் 5,690 இடம் காலியாக உள்ளன. வருவாய் பிரிவு பணியிடங்களையும் சேர்த்தால் மொத் தமுள்ள 14,804 பணியிடங்களில் 7.119 இடங்கள் காலி யாக உள்ளன.

ஜலதோஷம் பிடித்தால் யாரும் மூக்கை அறுக்க மாட் டார்கள். மூட்டை பூச்சித்தொல்லை என்பதற்காக யாரும் வீட்டைக் கொளுத்த மாட்டார்கள். பணியாளர்கள் குறைவு என்றால் ஆட்களை நியமிக்க வேண்டுமே தவிர. அதைத் தனியாரிடம் ஒப்படைக்கக்கூடாது.

மின்கணக்கீட்டாளர்கள் பணிக்கு ஒப்பந்த பணியா ளர்கள் நியமிக்காமல், அனைத்துக் காலியிடங்களை யும் நிரந்தர பணியாளர்களைக் கொண்டு நிரப்ப விஜய் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"ஜெம்" வீரமணி மீது எடுத்த நடவடிக்கையைத் தடுத் தது யார் என்கிறார் விஜய்.

திருடன், திருடன் எனத் திருடனும் கத்திக்கொண்டு ஓடிய கதையாய். த.வெ.க. அமைச்சர்களும், கொண்டி ருக்கிறார்கள். பிரமுகர்களும் இன்று நடந்து

கடந்த ஆகஸ்ட் 19ஆம் தேதி தனது வழக்கறிஞர்கள் மூலம் தமிழக அரசு இந்த வழக்கை நிறுத்திக்கொண்டது எதனால்?

19 ஆண்டுகளுக்கு முன் நடந்ததாக கூறப்படும் சம் பவத்திற்காக தி.மு.க. ஆட்சியில்தான் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அதற்காக தமிழகம், தலைவர் ஸ்டாலி னுக்கும், அன்றைய போலீஸ் கமிஷனர் அருண் அவர் களுக்கும் பாராட்டு தெரிவித்தது.

ஏறத்தாழ 19 ஆண்டுகளுக்கு முன் நடந்த தவறுகள். அக்டோபர் 5ம் தேதிதான் முதல் புகார் வருகிறது. முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின் அரசு உடனடியாக வழக் குத் தொடுத்து, ஆதாரங்களைத் தேடிச் சேகரித்து வரும் சூழலில், கவர்னர் ஆட்சி, அதன்பின் விஜய் ஆட்சி.

தி.மு.க. அரசு தொடுத்த இந்த வழக்கில், எங்களுக்கு எந்த முன்னேற்றமும் வராததால், வழக்கை வாபஸ் பெறுகிறோம் என ஜூன் மாதம் கூறியதை அடுத்து. ஆகஸ்ட் 19ல் போக்சோ வழக்கில் நீதியரசர் இதுபோன்ற அநியாயத்தை நாங்கள் பொறுத்துக்கொண்டிருக்க முடி யாது. உடனடியாக வீரமணியைக் கைது செய்ய வேண் டும் என்று 27ஆம் தேதி ஆணையிட்ட பிறகுதான் 29ஆம் தேதி விஜய் அரசு, வீரமணியைக் கைது செய் தது.

வழக்கை முடித்துக்கொள்வதாக விஜய் அரசு நீதிமன் றத்தில் ஆகஸ்ட் 26ஆம் தேதி சொன்னதற்காகப் பெற் றது முன்னூறு கோடி என்று நானும் சொல்லவா?

தான் திருடி பிறரை நம்பமாட்டாள் என்கிற கதை யாய், நாடகத்தை நடத்தி நடிக்கிறார்கள் த.வெ.க.வினர்.

எங்கள் சின்னவர் உதயா. முதல்வர் விஜய் சினி மாவை காட்டிலும், அரசியலில் நன்றாக நடிக்கிறார்" என்றார். ஆனால் நடிக்க வேண்டிய திரைப்படத்தில் நடிக் காமல் நடிக்கக்கூடாத அரசியலில் நடிக்கிறார் விஜய்.

விஜயின் தாயாரை திட்டினார்களாம். இவர் பொறுத் துக் கொண்டாராம். நீ அப்பாவைக் காணோம் எனக் கேட்டாய், பா.ஜ.க. நயினார் உன் அம்மாவிடம் கேள் என்றார். பா.ஜ.க.விடம் மூச்சுவிட முடியாது. இங்கே காட்டுக் கத்துக் கத்துகிறாய்.

பெற்ற அப்பா, அம்மாவிடம் தன் பிறந்த நாளில் நேரில் சென்று வாழ்த்து வாங்காமல், தன் வீட்டிற்குள்ளும் அனுமதிக்காமல், மூன்றாம் மனிதரைப் போல கோட்டைக்கு வரச்சொல்லி ஆசிபெற்ற விஜயின் லட்சணம்தான் ஊருக்கே தெரியுமே.

மனைவியைப் பற்றி அசிங்கமாக ஆபாசமாக எழு தினால், பேசினால். அந்த அளவுக்கு அது ஓர்த் இல்லை. நீங்க விட்டுடுங்க நான் பார்த்துக் கொள்கிறேன். எனக் கூறி கெட்ட வார்த்தைகளைப் பேசியவர்களைத் தட்டிக் கொடுத்த நீங்கள் குடும்பத்தைப் பற்றி பேசலாமா?

ஸ்ரீவைகுண்டத்தில், எம்.எல்.ஏ. சரவணன் பொய் சொல்லித்தான் என்னை அழைத்து, குளிர்பானத்தில் மருந்து கொடுத்து மயக்கம் அடையச் செய்து வன்பு ணர்ச்சி செய்தார்கள் என்று புகார் கொடுத்த த.வெ.க. பெண் நிர்வாகியின் மனு என்ன ஆயிற்று?

தன் தம்பி மனைவியை உருட்டுக்கட்டையால் தாக் கினாரே மரியவில்சன். அவரின் வீடியோ தமிழகம் முழு வதும் வலம் வருகிறதே வழக்கு முடியும் வரையாவது, அமைச்சரவையிலிருந்து ஒதுங்கிக்கொள் என்று சொல் கிற தைரியம் விஜய்க்கு உண்டா?

பா.ஜ.க. மாநிலப் பொறுப்பாளர் என்னை ஏமாற்றி அனுபவித்துவிட்டு. சொத்தையும் பிடுங்கிக்கொண்டு, மற்றவர்களுக்கு விருந்தாக்க முனைந்தார் என பல நாட் களுக்கு முன், பா.ஜ.க.கூட கருப்பை கட்டம் கட்டி இருக் கிறது. ஆனால் தமிழக காவல்துறை கைகட்டி நின்று. நேற்றுதான் வழக்கே போடுகிறது. இதுதான் த.வெ.க. அரசின் லட்சணமாம்.

தன் சொந்த கட்சி எம்.எல்.ஏ. பாபுவை மருத்துவம னையில் பார்க்காமல், கட்டிடத்தை சுற்றி வந்தாயே, பாபுவுடன் உன் படமே வெளிவரவில்லையே ஏன்?


6 கோடி செலவுசெய்து மலர்தூவி மேட்டூரில் படம் வெளிவருகிறது. எம்.எல்.ஏ. உடன் ஒரு படம் வரக்கூ டாதா?

இடைத்தேர்தல் மேடையில் உங்கள் கூட்டணி கட் சியினரைக் காணோமே எங்கே?

ஒட்டுமொத்தமாகத் தமிழகத்தை விற்கும் முயற்சியில், மின்வாரியத்தை தனியாரிடம் விற்காமல், கோயாபல்ஸை மிஞ்சும் பொய் பேசாமல், கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றிட வேண்டுகிறோம்.

நெறி இல்லாமல் தறிகெட்டு ஓடும் விஜயின் ஓட்டத் திற்கு, ஒரு மூக்கணாங்கயிறாக தாராபுரம், மதுராந்தகத் தில் உதயசூரியனுக்கே வாக்களித்து தி.மு.க. வேட்பா ளர்களை வெற்றிபெற வைப்போம்.

வாக்களிப்பீர் உதயசூரியன்



கவிஞர்
காசிமுத்து மாணிக்கம்
(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பி.என். சுப்பிரமணியன்

அக்டோபர் 1 (2015)



1956ஆம் ஆண்டில் கழக உறுப்பினராகி கழகப் பணியாற்ற துவங்கினார்.

25 ஆண்டுகள் தொடர்ந்து ஆற்காடு நகரச் செயலாளராகவும், 8 ஆண்டுகள் மாவட்டப் பொருளாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர். அத்தோடு, பத்து ஆண்டுகள் தலைமை தணிக்கைக் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

1996ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.